Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate

Official Property Record



Digitally Verified Record - Powered by Verified RealEstate™

1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்
201-வது பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமம்

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலகம்

முன்னிலை : திரு. தே. கிளைராஜ்

கட்ட உரிமம் எண். 12/2016-2017 தேதி 4-5-2016

பொருள் : கட்ட உரிமம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி க.ச.எண் 413/1A1C, 3, 4 ..... இடத்தில் புதிய / ~~சேர்த்து~~ / திருத்தி ~~அமைத்து~~ கட்டடம் கட்டுதல் அனுமதி வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை : திரு/திருமதி K.R. புஷ்பராஜ், B. ஜெயபதி, B. சந்தோஷ் அவர்களின் 28/3/2016 ..... ஆம் தேதிய விண்ணப்பம்

உத்தரவு

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வார்டு எண் - 16, பிளாட் எண் ..... க.ச. எண் 413/1A1C, 3, 4 இடத்தில் குடியிருப்பு / ~~தொழிற்சாலை~~ கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி .....

திரு / திருமதி K.R. புஷ்பராஜ், B. ஜெயபதி, B. சந்தோஷ் ..... சமர்ப்பித்துள்ள கட்டட வரைபடங்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 101-வது பிரிவின் கீழ் இவ்வுத்தரவு தேதியிலிருந்து 3 - மூன்று ..... காலத்திற்குள் புதிய / சேர்த்து திருத்தியமைத்து கட்டடம் கட்டிக்கொள்ள வரைபடத்தினை அங்கீகரித்து அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை கட்டட வேலை முடிந்த பதினைந்து தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு எழுத்து மூலமாகத் தெரியப்படுத்த வேண்டும்.
2. சர்க்கார் நிலத்திலும் பொதுச்சாலைகளிலும் ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது.
3. இந்த உரிமத்தில் கண்ட கால அளவிற்குப் பிறகு, மனு செய்து உரிமம் பெறாமல் கட்டட வேலை செய்யக்கூடாது.
4. அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டடங்களுக்கான உரிமம் புதுப்பித்துக்கொள்ள உரிய உரிமக் கட்டணம் செலுத்தி 7 (ஏழு) நாட்களுக்கு முன்னர் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.
5. அங்கீகாரம் பெறப்பட்ட வரைபடத்தில் மாறுதல் செய்ய வேண்டுமானால் மீண்டும் திருத்திய வரைபடங்கள் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று கட்டட வேலை செய்ய வேண்டும்.
6. விண்ணப்பதாரர் பெறப்பட்ட கட்டட உரிமத்தையும் வரைபடத்தையும் கட்டடம் கட்டுமிடத்தில் வைத்திருக்க வேண்டும். பேரூராட்சி அலுவலக அதிகாரம் பெற்ற அதிகாரிகள் வந்து கேட்கும் போது காண்பிக்க வேண்டும்.
7. உரிமம் கட்டுப்பாட்டிற்கும் உரிமம் பெற்ற வரைபடத்திற்கும் மாறாக செய்தாலும் நகராட்சி சட்டத்திற்கோ அல்லது வேறெந்த சட்டதிட்டங்களுக்கு மாறாக உரிமம் பெற்று இருந்தாலும் உண்மைகளை மறைத்து தவறான வழியில் உரிமம் பெற்று இருந்தாலும் இந்த உரிமம் தள்ளுபடி செய்யப்படும்.
8. கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லத்தக்கதல்ல.
9. இக்கட்டடம் 3-5-2019 ..... தேதிக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் பிரத்தியேகமாக அனுமதிக் கட்டணம் செலுத்தி அனுமதி பெற்றபின் மேற்கண்ட கட்டட வேலையினை தொடர்ந்து செய்ய வேண்டும்.
10. கட்டடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை பொதுப்பாட்டையில் விடாமல் உரிமதாரர் காம்பவுண்டுக்குள் செஸ்பூல் கட்டி அப்போதைக்கப்போது சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

(பின் பக்கம் பார்க்கவும்)

11. மனைப்பிரிவிற்குத் தேவையான வசதிகள் யாவும் மனைப்பிரிவு நில உரிமையாளரால் செய்து கொடுக்க வேண்டும். இந்த நிலப்பரப்பில் நில உரிமையாளரால் விதிகளின்படி தேவையான அனைத்து வசதிகளையும் செய்யாததால் வசதிகளைச் செய்ய விகிதாச்சார முறையில் விண்ணப்பதாரர் செலுத்தியுள்ள தொகை வசதிகளைச் செய்ய ஒரு பகுதித் தொகையாகத்தான் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள இத்தொகையை போதவில்லையெனில் அதிகமாக இப்பேரூராட்சியில் நிர்ணயம் செய்யப்படும் தொகையினை விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும்.

12. மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள அனைத்து மனையிடத்தில் சொந்தக்காரரும் தொகையைச் செலுத்திய பின்னரே அனைத்து வசதிகளையும் செய்ய வேண்டியுள்ளதால் அலுவலகத்திலிருந்து இவ்வசதிகளைச் செய்யும் வரை தொகை செலுத்தியதை வைத்து உரிமை கொண்டாடக்கூடாது.

13. சமயலறையில் புகைபோக்கி அமைக்க வேண்டும்.

14. முறையான வடிகால் வசதி அமைக்க வேண்டும்.

15. கண்டிப்பாக மழைநீர் சேமிப்புத்தொட்டி அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

16. அனுமதி கோரும் இடம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு ஏதாவது இருப்பினும் வில்லங்கம் ஏதாவது இருப்பினும்இவ்வுத்திரவு செல்லத்தக்கதல்ல.

17. மனைப்பிரிவில் அபிவிருத்திக் கட்டணம் செலுத்தி இருப்பினும் அப்பகுதியின் வளர்ச்சியை கணக்கில் கொண்டும் பேரூராட்சியின் நிதி வசதிக்குட்பட்டும், மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் படிப்படியாக வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படும். அடிப்படை வசதிகள் குறித்து தனியாகவோ, கூட்டாகவோ பேரூராட்சிக்கு எவ்விதத்திலும் எந்த ஒரு நிர்பந்தமும் செய்தல் கூடாது.

18. சூரிய ஒளி மூலம் குளிர் நீரை வெந்நீராக்கும் கருவி பொருத்த வேண்டும்.

19. திடக்கழிவு வேண்மையினை கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும்.

20. கட்டடம் கட்டுமானம் மற்றும் இதர காலங்களில் செங்கல் மற்றும் இதர புகையூட்டும் பொருட்களினால் மற்றவர்களுக்கு இடையூறு செய்தல் கூடாது.

21. கட்டம்சாலையிலிருந்து 10அடியும்மற்றபக்கங்களில்சுற்றிலும்5அடியும்இடைவெளிவிட்டுகட்டப்படவேண்டும்.

22. அரசு ஆணை (நிலை) எண். 79 நகராட்சியின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நீ,) நாள் 16.6.2000 கீழ் உள்ள விதி முறைகளுக்குட்பட்ட அபிவிருத்தி பணிகள் செய்ய இயலும். எனவே அக்கோரிக்கையினை முன்னிருத்தக்கூடாது.

செயல் அலுவலர்

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி

கோயமுத்தூர்

4/5/2016

பெறுநர்

திரு, திருமதி K.B.பழனிசாமி, B.கலையரசி,
R.சிவக்குமார்.

க.எண்.

கோவை

தெரு பெயர்

நகர சுகாதார ஆய்வாளர்

சம்பந்தப்பட்ட வார்டு வரி தண்டலருக்கு கட்டடம் முடிவடைந்தும் வரிவிதிப்பிற்காக மாதாந்திர பட்டியலில் சேர்த்து அறிக்கை சமர்ப்பிக்க.

அனுப்புநர்

திரு. சி. மதிவாணன், பி.இ.,
உறுப்பினர் செயலர் (பொ)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாநகராட்சி வணிக வளாகம்,
சிவானந்தா காலனி,கோயம்புத்தூர்-12.

Email: dtcpchennai@gmail.com
clpams@gmail.com

பெறுநர்

திரு. K.R. பூமிநாதன்,
திருமதி.B.கலையரசி,
திரு. R. சதீஷ்குமார்,
37, மாயக்காள் வீதி,
கே.கே. புதூர்,
கோயம்புத்தூர்-641038.

ந.க. எண்.7129/ 2015 / உதிகு - 3 நாள்:22.03.2016

ஐயா,

பொருள்: திட்ட அனுமதி – கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி/கிராமம் - க.ச.எண்கள் 413/1A1C, 3 மற்றும் 4 – மனைப்பரப்பு 1107.26சமீ – உத்தேச ஸ்டில்ட் + 4 தளங்களில் 28 குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது - உள்ளாட்சியிடம் அனுமதி இறுதி ஒப்புதல் பெறுதல் - விபரங்கள் தெரிவித்தல் - சம்மந்தமாக.

பார்வை:
1. தங்கள் விண்ணப்பம் நாள் 18.12.2015, 19.01.2016 மற்றும் 14.03.2016
2. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண் 28 நாள் 17.02.2016
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும திட்ட அனுமதி எண் 50/2016, நாள் 22.03.2016

----------0----------

மேற்காணும் பொருள் தொடர்பாக, பார்வை 2ல் கண்ட கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும, தீர்மானத்தின்படி மேற்படி உத்தேசத்திற்கு திட்ட அனுமதி வழங்கி செயல் அலுவலர், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அவர்களுக்கு பார்வை 3ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே இறுதி ஒப்புதல் தொடர்பாக செயல் அலுவலர், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அவர்களை அணுகி பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

22/3/16

உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர் - 12.

Scanned with CamScanner

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு. சி. மதிவாணன், பி.இ.,

திட்ட அனுமதி

நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்

ந.க.எண். 7129/2015/உதிகு-3 நாள்: **22.03.2016**

தி.அ. எண்.50/2016

உள்ளாட்சியின் பெயர்: **பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சி**

பொருள் : **திட்ட அனுமதி – சிறப்பு கட்டிடம் - கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி/கிராமம் - க.ச.எண்கள் 413/1A1C, 3 மற்றும் 4 – மனைப்பரப்பு 1107.26சமீ – உத்தேச ஸ்டில்ட் + 4 தளங்களில் 28 குடியிருப்புகள் கொண்ட கட்டிட வரைபடத்திற்கு திட்டஅனுமதி வழங்குதல் - தொடர்பாக.**

பார்வை :
1. மனுதாரர் திரு. K.R. பூமிநாதன், B. கலையரசி, R. சதீஷ்குமார் விண்ணப்பம நாள் 18.12.2015, 19.01.2016 மற்றும் 14.03.2016
2. செயல் அலுவலர், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி கடிதம் ந.க.எண் 925/2015 நாள் 22.12.2015
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண் 28, நாள் 17.02.2016.
4. மனுதாரர் வளர்ச்சிக் கட்டணம் செலுத்தப்பட்ட நாள் 14.03.2016

உத்திரவு:

கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக் குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம், வடக்கு வட்டம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி/கிராமம், க.ச.எண்கள் 413/1A1C, 3 மற்றும் 4 ஆகியவற்றில் அமைந்துள்ள 1107.26சமீ பரப்பு கொண்ட மனைக்கு **"ABCDEF"** என எல்லையிட்டும், வரைபடத்திற்கு **ம.வ/கோஉதிகு எண் 49/2016** என எண்ணிட்டு மனை ஒப்புதலும் அம்மனையில் அமையும்,

Scanned with CamScanner

கட்டிட பரப்பு விவரம்

மனையின் பரப்பு 1107.26சமீ

தளம்	FSI Area in Sqm	Non-FSI Area in Sqm	Total Area in Sqm	உபயோகம்
ஸ்டில்ட் தளம்	-	460.68	460.68	வாகன நிறுத்துமிடம்
முதல் தளம்	431.25	29.43	460.68	7 குடியிருப்புகள்
இரண்டாம் தளம்	431.25	29.43	460.68	7 குடியிருப்புகள்
மூன்றாம் தளம்	431.25	29.43	460.68	7 குடியிருப்புகள்
நான்காம் தளம்	431.25	29.43	460.68	7 குடியிருப்புகள்
டெரஸ் தளம்	-	16.17	16.17	மாடிப்படி கூண்டு
மொத்தம்	**1725.00**	**594.57**	**2319.57**	28 குடியிருப்புகள்

கொண்ட கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி எண்.50/2016 என்ற எண்ணில் 22.03.2016 முதல் 3 (மூன்று) வருட காலத்திற்கு கீழ்காணும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை-1

நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

பொது நிபந்தனைகள்

1. திட்டஅனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)- கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2. பிரிவு 80, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)-ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

Scanned with CamScanner

3. கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு (i) திட்ட அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ., (ii) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4. (i) அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002-ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும். (ii) குளியல் அறை மற்றும் Wash Basin கழிவுநீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

5. சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating System) அமைக்கப்பட வேண்டும்.

6. மனையில் கட்டிடம் கட்டும்போது Fly Ash Bricks & Materials கண்டிப்பாக பயன் படுத்தப்படவேண்டும்.

7. (i) வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும். (ii) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும் (iii) உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய சட்டம் பிரிவு 25 (Water Act) ன்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.

8. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.11.2004-ன்படி கட்டிடத்தில் U Trap in the septic tank design அமைக்கப்பட வேண்டும்.

9. கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

10. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத்தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.

11. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதிகள் ஆகியவற்றை மனுதாரர் தம்சொந்த செலவில் செய்துதர வேண்டும்.

12. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

13. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

14. The Applicant / developer and also the architects / Licensed Surveyors and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

15. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

16. கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஓயரிங் செய்யப்பட வேண்டும்.

Scanned with CamScanner

17. கோயம்புத்தூர் பகுதியானது Seismic Zone - III ஆக வரையறுக்கப்பட்ட பகுதியில் அமைவதால் கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

18. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு/ வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (கோயம்புத்தூர் மாநகராட்சி உட்பட)பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

19. கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு / மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை-2

1. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

2. The Provisions in the G.O.(Ms). No. 17, H & UD (UD 4(3), Department, dated 05.02.2016, relating to installation and use of Solar energy system, should be followed.

திட்ட அனுமதி செயலாணை கடிதத்தினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

24/3/2016

உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர் - 12.

22/3/16

இணைப்பு
முத்திரையிட்ட வரைபடம் - 2 தொகுப்பு

பெறுநர்
செயல் அலுவலர், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்

நகல் (உள்ளாட்சி வழியாக)
திரு. K.R. பூமிநாதன் மற்றும் இருவர்,
37, மாயக்காள் வீதி, கே.கே. புதூர், கோயம்புத்தூர்-641038.

Scanned with CamScanner

Our services go beyond

Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

Smarter Tools, Stronger Decisions

Property Valuation & Cost Estimation
Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification
Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis
Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools
Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools
Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

Verified RealEstate™

We’re honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate